# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 05/09/2018 | முதல் | 09/09/2018 |
| அறிக்கை எண் : | 070/ 2018 | வெளியீட்டு நாள் : | 04/09/2018 | | |

| கடந்த கால வானிலை 31/08/2018 முதல் 03/09/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 7.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23-25 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 45-83 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 3-7 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 09-09-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 05-09-2018 | 06-09-2018 | 07-09-2018 | 08-09-2018 | 09-09-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 4 | 2 | 1 | 1 | 8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35 | 35 | 36 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 35 | 30 | 30 | 35 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 6 | 6 |
| காற்றின் திசை | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு |

**குறுஞ்செய்தி :**
வரும் செப்டம்பர் 5ம் தேதியன்று லேசான மழையும், 6, 7, 8ம் தேதிகளில் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் மிக லேசான மழையும் 9ம் தேதியன்று மிதமான மழையும் பெய்வதற்கான வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில் வடமேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்: மக்காச்சோளம் & கால்நடை**

மக்காச்சோளம் நடவுக்கு தயாராகும் விவசாயிகள், மக்காசோளம் சாகுபடியில் விதைநேர்த்தி செய்தல் நல்ல பயனை அளிக்கும். நல்ல தரமுடைய விதைகளை தேர்ந்தெடுக்கவும். ஒரு எக்டேர் விதைக்கு 20 கிலோ வீரிய ஒட்டு இரக விதைகள் அல்லது, 25 கிலோ இரக விதைகளும் தேவைப்படும். ஒரு செடிக்கும் மற்றோர் செடிக்கும் இடையே 20 செ.மீ இடைவெளியும், பாருக்கு பார் 45 செ.மீ இடைவெளியும் இருக்கவேண்டும். பூஞ்சாண விதை நேர்த்தி செய்த விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு எக்டேருக்கு மூன்று பாக்கெட் அசோஸ்பைரில்லம் (1600 கிராம்) கொண்டு விதை நேர்த்தி செய்யவேண்டும். விதையை 4 செ.மீ ஆழத்தில் ஊன்ற வேண்டும்.

வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூசவேண்டும்.